In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 163/2023 | Prosecution witness P.W.1 |
| Name: **Bavatharani** | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 15-04-2025.

**(Accused 1 produced through V.C. A4, 6 are produced. A3, A5, A7, A8, A9 are present.)**

முதல் விசாரணை :-

நான் திண்டுக்கல் ஒய்.எம்.ஆர்.பட்டி வஉசி நகரில் வசிக்கிறேன். சம்பவத்தில் இறந்துபோன சரவணக்குமார் எனது கணவர். எங்கள் திருமணத்தின் விளைவாக எங்களுக்கு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தையின் பெயர் வேதமித்ரன். சம்பவத்தின்போது அவனுக்கு வயது 1.1/2. என் கணவர் திண்டுக்கல் சிலுவத்தூர் ரோட்டில் மீன்கடை வைத்து வியாபாரம் செய்துவந்தார். எங்களுடன் என் மாமியார் மாரியம்மாள் இருந்துவந்தார். 20.07.2023ம் தேதியன்று மாலை 6, 6.30 மணியளவில் என் குழந்தையை இருசக்கர வாகனத்தில் கூட்டிக்கொண்டு தைலக்காட்டுக்கு கிரிக்கெட் விளையாட சென்றார். அதே தினம் மாலை சுமார் 7.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது என் குழந்தைக்கு இரத்தக்காயத்துடன் சுதன்பிரபு என்பவர் என் வீட்டிற்கு கூட்டிவந்தார். நான் என்ன என பதட்டத்துடன் கேட்டபோது சுதன்பிரபு அண்ணனை (என் கணவரை) வெட்டி கொன்றுவிட்டதாகச் சொன்னார். என் குழந்தைக்கு முகத்தில் வலதுபக்க முன்னந்தலையில் சிராய்ப்புக்காயம் இருந்தது. நான் கேள்விப்பட்டு என் குழந்தையுடன் சம்பவ இடமாகிய தைலக்காட்டிற்கு சென்றேன். என்னுடன் என் மாமியாரும் வந்தார். என் வீட்டிலிருந்து தைலக்காடு 1,2 கி.மீ. தொலைவு

இருக்கும். இருவரும் நடந்து சென்றோம். தைலக்காட்டுக்கு போகும் வழியில் தைலக்காட்டிற்கு முன்பாகவே முனியப்பன் என்பவர் வீட்டிற்கு முன்னால் ரோட்டிற்கு இடதுபக்கத்தில் குப்புறகிடந்தார். தலை சிதைந்த நிலையில் இறந்து கிடந்தார். எனக்கு மயக்கமாக வந்துவிட்டது. அங்கிருந்த போலீசார் எனது கணவரின் உடலை எடுத்து ஆம்புலன்சில் கொண்டுபோய் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் ஒரு ஆட்டோ பிடித்து நான், என் மாமியார், என் குழந்தையுடன் திண்டுக்கல் அரசு மருத்துவனை சென்று என் கணவரை பார்த்தபோதுதான் அவருக்கு முகத்தில், இரண்டு கைகளிலும், கழுத்தில், தலைப்பகுதியில் எல்லா பகுதியிலும் அதிக வெட்டுக்காயங்கள் இருப்பதை பார்த்தேன். எனக்கு ஒருமாதிரியாக ஆனதால் 2,3 நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டு அதன் பின்பு 11.30 மணியளவில் நான், என் மாமியார், என் உறவினர்கள் இரண்டுபேர்கள் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்திற்கு சென்றோம். நான் நடந்ததை காவல்நிலையத்தில் புகாராக சொன்னேன். காவல் நிலையத்தில் வைத்துதான் அல்லாசிக் என்பவர் என் கணவரை கொன்று விட்டதாக போட்டோவை காண்பித்து சொன்னார்கள். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. நான் கொடுத்த புகாரில் எதிரிகள் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுக்கொடுக்கவில்லை. எனக்கு தெரிந்ததை, நடந்தை புகாராக சொன்னேன். புகாரை நான்தான் எழுதிக்கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அதசாஆ.1. மறுநாள் டவுன் ஆய்வாளர் திரு.உலகநாதன் அவர்கள் என்னை விசாரித்தார். அவ்வாறு விசாரிக்கும்போது என்ன நடந்தது என ஆய்வாளரிடம் கேட்டேன். ஆய்வாளர் என்னிடம் அல்லாசிக் என்பவரின் போட்டோவை காண்பித்து அவர்தான் என் கணவரை கொலை செய்ததாகச் சொன்னார். என் கணவருக்கும் அல்லாசிக்குக்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்தது. Homo Sexual வீடியோவை என் கணவர்தான் வெளியிட்டதாக அல்லாசி மற்றும் அவருடன் சேர்ந்தவர்கள்

என் கணவரை ஒரு மாதத்திற்கு முன்னதாக மிரட்டி வருவதாக என்னிடம் என் கணவர் சொல்லியிருந்தார். நான் என் கணவரிடம் வெளிப்பக்கம் போகும்போது பார்த்து போய்வாருங்கள், எந்த பிரச்சனையும் வைத்துக்கொள்ளவேண்டாம் என சொல்லியிருந்தார். என் கணவர் என்னிடம் என்னையும், குழந்தையையும் நீ கவனமாக பார்த்துக்கொண்டு நீயும் கவனமாக இரு எனச்சொன்னார். என் கணவருக்கும் அல்லாசிக்கைச் சேர்ந்தவர்களுக்கும் மேற்படி பிரச்சனை மட்டும் இருந்தது தான் எனக்கு தெரியும். வேறு என்ன பிரச்சனை என எனக்குத் தெரியாது. 28.7.2023ம் தேதியன்று ஜே.எம்.2 திண்டுக்கல் நீதிமன்றத்தில் குவிமுசி.164ன் கீழ் நான் வாக்குமூலம் கொடுத்தேன். அடுத்த நாள் டிஎஸ்.பி.கோகுலகிருஷ்ணன் என்னை விசாரித்தார். என் கணவரை வெட்டிக் கொன்றதாக கேள்விப்பட்டேன். எத்தனை பேர் என் கணவரை எந்த வகையில் வெட்டிக்கொன்றார்கள் என நான் கேள்விப்படவில்லை. இதுசம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1,3 மற்றும் 5ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

சுதன்பிரபு என் கணவரின் நண்பர். சுதன்பிரபு தகவல் சொன்னவுடன் கால்மணி நேரத்தில் மாலை சுமார் 7.45 மணியளவில் சம்பவ இடம் சென்றிருப்போம். நாங்கள் சம்பவ இடம் சென்றபோது அந்த இடத்தில் கூட்டம் இருந்தது, போலீசாரும் இருந்தார்கள் என்றால் சரிதான். இரவு 8 மணியளவில் நாங்கள் அரசு மருத்துவமனை சென்றிருப்போம் என்றால் சரிதான். அரசு மருத்துவமனையிலும் போலீசார் அதிகமாக இருந்தார்கள் என்றால் சரிதான். என் உறவினர்களும் இருந்தார்கள். அங்கு இருந்த போலீசார் எந்தக் காவல் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் வைத்தோ, திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வைத்தோ போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். திண்டுக்கல் டவுன் வடக்கு காவல் நிலையம் அரசு மருத்துவமனைக்கு எதிர்த்தார்போல் உள்ளது என்றால் சரிதான்.

மருத்துவமனையிலிருந்து 2 நிமிடத்தில் காவல் நிலையத்திற்கு நடந்து செல்லலாம் என்றால் சரிதான். நானோ, என் உறவினர்களோ உடனடியாக எதிர்த்தார்போல் உள்ள காவல்நிலையத்திற்கு சென்று நடந்த சம்பவத்திற்கு புகார் கொடுக்கவேண்டுமென தோன்றியதா என்றால் அந்த நேரத்தில் எனக்கு தோன்றவில்லை. என் கணவரை கொலை செய்துவிட்டதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இரவு 8 மணியளவில் அரசு மருத்துவமனைக்கு வந்த பின்பு சுமார் 3.1/2 மணி நேரம் காலதாமதமாக புகார் கொடுத்ததற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். என் கணவரை யார் கொலை செய்தார்கள் என்ற விவரம் எனக்கும் தெரியாது என்றும், காவல்துறையினருக்கும் தெரியாது என்றும், பின்னிட்டு காவல்துறையினர் சொன்னதன்பேரில் நான் புகாரை எழுதி காவல்நிலையத்தில் கொடுத்தேன் என்றும் சொன்னால் சரிதான். சம்பவ இடத்தின் அருகில் உள்ள வீடுகளில் உள்ளவர்களை எனக்கு தெரியாது என்றால் அந்த நேரத்தில் பதட்டத்தில் நான் அவர்களை கவனிக்கவில்லை. என் கணவர் சரவணக்குமாருக்கு போன் மூலமாக மிரட்டல் வந்ததாகத்தான் என்னிடம் சொன்னார். என் கணவர் மீது நிறைய குற்ற வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பே என் கணவர் இளவராக இருந்தபோது தமிழ்தென்றல் என்பவரை கொலை செய்ததாக வழக்கு இருந்தது என்றால் சரிதான். என் கணவர் மீது நிறைய குற்றவழக்குகள் இருந்தது என்றும், என் கணவர் முன்விரோதத்தை சம்பாதித்து வைத்திருந்தார் என்றும், அந்த முன்விரோதத்தால் யார் என் கணவரை கொலை செய்தார்கள் என்று சொல்ல முடியாது என்றால் சரிதான். திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் சொன்னதன் பேரில் அல்லாசிக் பெயரை சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர் மட்டும் சொல்லவில்லை, நான் விசாரித்ததிலும் எனக்கு தெரிந்தவரையிலும் சுமார் என் கணவர் இறப்பதற்கு 1.1/2 மாதத்திற்கு முன்னதாக மேற்படி

முன்விரோதம் இருந்ததாக என் கணவர் என்னிடம் சொன்னதாலும் அல்லாசிக் மற்றும் அவருடன் சேர்ந்தவர்கள் செய்திருப்பார்கள் எனச் சொன்னேன். மேற்படி காரணத்தினால் நான் யூகித்துச்சொன்னேன் என்றால் சரிதான். என் கணவர் சொன்னதன் பேரிலும், திண்டுக்கல் நகர் வடக்கு காவல் ஆய்வாளர் சொன்னதன் பேரிலும், அல்லாசிக் பெயரை நான் சாட்சியத்தின்போது யூகத்தின்பேரில் சொல்கிறேன் என்றால் சரிதான்.

**7, 8 மற்றும் 9 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

என் குழந்தைக்கு ஏற்பட்ட காயம் சிராய்ப்புக்காயம் என்று போலீசார் விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சாட்சிகள் பாலசுப்ரமணி என்ற பாலாஜி, தினேஷ்பாண்டியன், நிவேதன் ஆகியோர்கள் என் கணவரின் நண்பர்கள் என்றால் சரிதான். சாட்சி சுதன்பிரபு மீது இந்நீதிமன்றத்தில் குற்ற வழக்கு உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. சம்பவ இடத்திற்கு சென்றபோது அந்த இடத்தில் வெளிச்சம் இருந்ததாக புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் கிடந்த இடத்தில் இரத்தம் சிந்தி கிடந்ததாக கூட புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் மீது திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையம், தாலுகா மற்றும் மேற்கு, தெற்கு காவல் நிலையங்களில் கொலை வழக்கு இருந்து நீதிமன்றத்திற்கு வந்து போய்க்கொண்டு இருந்தார் என்றால் சரிதான். காவல்துறையில் என் கணவர் மீது சரித்திர பதிவேடு குற்றவாளி என இருந்தது என்றால் எனக்கு தெரியாது. 8 மணியளவில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றபின்னர் நானும், என் உறவினர்களும் கலந்துபேசி புகார் கொடுக்கவேண்டுமென முடிவு செய்து அதன் பின்னர் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என் கணவருக்கு குடிப்பழக்கம் இருந்தது என்றால் திருமணத்திற்கு முன்னர் இருந்தது. திருமணத்திற்கு பிறகு இல்லை. என் கணவர் சரித்திர பதிவேடு குற்றவாளி

என்பதால் என் கணவருக்கு நிறைய எதிரிகள் உண்டு என்றும், அதனால் என் கணவர் குடிபோதையில் இருந்தபோது அவருக்கு பகையாக இருந்த வேறு நபர்களால் காயம் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரிலும், குவிமுச பிரிவு 164ன் கீழ் கொடுத்த வாக்குமூலத்திலும் காரில் வந்த எதிரிகள் என் கணவரை தாக்கியுள்ளார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 1வது எதிரி என் கணவரை மிரட்டியது சம்மந்தமாக நானோ என் கணவரோ காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் கணவர் அன்றைய தினம் மதியம் 2 மணிக்கு வீட்டில் சாப்பிட்டுச்சென்றவர் அதன் பின் மாலை 6.30 மணிக்கு வீட்டிற்கு வந்து என் குழந்தையை கூட்டிச்சென்றார். காவல்துறையினர் சொல்லிக்கொடுத்து நான் பொய்யான புகாரைக் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4 மற்றும் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

1,3,5,7,8,9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.15 15:54:14 +0530

Principal District Judge,
Dindigul.